# அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர் : 10 இதழ் : 3 மார்ச் 2024 தனிபிரதி – ரூ. 20/– ஆண்டு சந்தா– ரூ. 200/– | Vol : 10 Issue No :3 March 2024 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-



## இயேசுவின் சிலுவையைப் பற்றிய உபதேசமும் வெற்றியும்

I கொரிந்தியர் 1:18, 15:55-57



# அன்பரின் ஊழியத்தில் 20 வருடமாக பங்காளராக இருக்கிற சகோதரியின் குடும்பத்திற்கு கர்த்தர் செய்த மகத்தான செயல்கள் ஏராளம் ஏராளம்!

நாங்கள் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். பில்லி சூன்ய கட்டுகளினால் அதிக கஷ்டங்களை அனுபவித்தோம். ஒரு சகோதரி மூலம் இயேசுவை அறிந்துக்கொண்டோம்.

## பில்லிசூன்ய கட்டிலிருந்து விடுதலை!

20 வருடங்களுக்கு முன்பு கும்பகோணத்தில் உள்ள ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் வந்திருந்தார்கள். ஜெபநேரத்தில் சகோதரர் எங்களைப் பார்த்து பல வருட செய்வினை கட்டுகள் உடையுது என சொன்னார்கள். அன்றிலிருந்து எங்கள் வாழ்வில் பெரிய சமாதானத்தை, விடுதலையை கர்த்தர் கொடுத்தார். அதிலிருந்து நாங்கள் அன்பரின் ஊழிய பங்காளராக இருக்கிறோம்.

## மின்சாரம் கிடைத்தது!

நாங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் எங்கள் கிராமத்தில் உள்ளவர்கள் எங்களுக்கு பலவிதத்தில் பிரச்சனை செய்தனர். எங்கள் வீடு தோட்டத்தில் இருந்தது. எங்கள் வீட்டிற்கு மின்சாரம் தரக்கூடாது என ஊரில் உள்ளவர்கள் 100 பேர் சேர்ந்து கையெழுத்து போட்டு RE-ஐ சந்தித்து கடிதம் கொடுத்துவிட்டனர். அப்பொழுது நான் திருச்சி அன்பரின் ஊழியத்தில் நடைபெறுகிற கூட்டத்திற்கு வந்து ஜெப விண்ணப்பத்தில் வீட்டிற்கு மின்சாரம் வேண்டும் என எழுதிக்கொடுத்து ஐயா அவர்களிடமும் சொல்லி ஜெபித்து வந்தேன். கர்த்தர் எங்களுக்கு இரங்கினார். பல தடைகள் மத்தியிலும் எங்கள் வீட்டிற்கு மின்சார இணைப்பு கிடைக்க கர்த்தர் உதவி செய்தார்.

## தம்பியின் படிப்பில் வெற்றி

என் தம்பியை நான் தான் வளர்த்தேன். நான் படிக்காத காரணத்தினால் என் தம்பி நன்றாக படிக்க வேண்டும் என ஒவ்வொரு மாதமும் அன்பரின் ஊழியத்திற்கு வரும்பொழுதெல்லாம் ஜெப விண்ணப்பத்தில் எழுதிக்கொடுத்து வருவேன். கர்த்தருடைய கிருபையினால் என் தம்பி Ph.D முடிக்க கர்த்தர் தயை செய்தார். அத்துடன் என் தம்பியும் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்டான்.

## மரண கட்டிலிருந்து விடுதலை

கடந்த வருடம் எங்கள் அப்பா மரணத்தருவாயில் படுக்கையில் இருந்தார். எங்கள் குடும்பத்தினர் அவருக்கு சவப்பெட்டிக்கு எல்லாம் தயார் செய்து விட்டனர். அந்த நேரத்தில் நான் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு விரைந்து வந்தேன். **Dr. ஜேன் ஜாஷ்வா** அவர்களிடம் என் அப்பாவின் நிலையைச் சொல்லி அப்பாவிற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சகோதரி என் அப்பாவிற்காக பாரத்துடன் ஜெபித்துவிட்டு, உங்கள் அப்பாவை கர்த்தர் காத்துக்கொள்வார், அவர் எழுந்து நடப்பார் என சொன்னார்கள். நானும் சாட்சி சொல்வதாக பொருத்தனை செய்து வந்தேன். ஜெபித்து வந்த மறுநாளே என் அப்பா படுக்கையிலிருந்து எழுந்து நடக்க ஆரம்பித்துவிட்டார். நல்ல சுகத்துடன் இருக்கிறார்கள். நான் கூட்டத்திற்கு வரும்பொழுதெல்லாம் அம்மா மற்றும் பாஸ்டர் என்னை மகளே என அழைத்து பாரத்துடன் ஜெபித்து அனுப்புவார்கள். இன்றைக்கு நாங்கள் கர்த்தருக்குள் வைராக்கியமாக சாட்சியாக வாழ்ந்து வருகிறோம். அதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம். ஐயாவிற்கும், ஐயா குடும்பத்தினருக்கும் எங்களுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறோம்.

-திருமதி. வனிதா மேரி, தஞ்சாவூர்.

# அன்பரின் ஊழியம்



Dr. ஜேன் ஜாஷ்வா

## ஆசிரியர் உரை...

கிறிஸ்துவுக்குள் பிரியமான பங்காளர்களே,

உங்கள் ஒவ்வொருவரையும் இந்த மாத பத்திரிக்கையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

குறிப்பாக இந்த மார்ச் மாதத்தில் தேர்விற்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கிற பிள்ளைகள் ஒவ்வொருவரையும் கர்த்தர் தம்முடைய ஞானத்தினால் நிறைத்து, அதிக மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெறச்செய்வார். அவர்களை நல்ல சுகத்துடன் காத்துக்கொள்வார்.

தேர்வு எழுதும் பிள்ளைகளுக்காக விசேஷித்த ஜெபங்களை ஏறெடுத்துள்ளோம். இந்த ஜெபத்தை வாட்ஸ் அப் மூலம் பெற விரும்புகிறவர்கள் 9597555066 எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள். உடனே அனுப்பி வைக்கிறோம். பிள்ளைகளுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும்.

**சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. ...பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று. நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம், அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். 1கொரி.1:18,21,23**

சிலுவையில் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் வல்லமை இன்றும் குறைந்து போகவில்லை. உலகிலுள்ள ஞானவான்கள் ஐசுவரியவான்கள் நினைப்பது போல இயேசுவின் சிலுவையானது சாபத்திற்கும் மரணத்திற்கும் அடையாளமானது அல்ல. இயேசுவின் சிலுவை ஜீவனுக்கும், வெற்றிக்கும், சுகத்திற்கும், விடுதலைக்கும் அடையாளமானது. இயேசுவின் சிலுவையின்றி சுவிசேஷமே இல்லை. அநேக கிறிஸ்தவர்கள் இக்காலங்களில் சிலுவையை மறந்து, வேதத்தின் சில பகுதிகளை மட்டும் எடுத்துக்கொண்டு, பிறரை உற்சாகப்படுத்தும் விதத்தில் பயன்படுத்துகிறார்கள். ஆனால் **வேதம் சொல்வது போல சிலுவை கிறிஸ்தவ வாழ்க்கையின் மையமாக இருக்கிறது.** கிறிஸ்து சிலுவையில் மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததின் நிமித்தமாக நமக்கும் நித்திய ஜீவனுண்டாகும் என்ற நம்பிக்கை உண்டாகிறது. ஒரு நாளும் இதை மறந்து போகாதீர்கள், சோர்ந்து போகாதீர்கள். நமது தேவனாகிய இயேசுவைப்போல நாமும் அவருக்குள் வெற்றி சிறப்போம்.

மார்ச் மாதம் திருச்சியில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

ஊழியத்தை உற்சாகமாய் தாங்கக்கூடிய பங்காளர்களை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாகவும், ஊழியத்தின் தேவைகளை கர்த்தர் சந்திக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**Ministry of Jesus**–ன் **YouTube** சேனலில் ஞாயிறுதோறும் மாலை 7.00 மணிக்கு அற்புதத்தின் மாலை என்ற புதிய நிகழ்ச்சியானது வெளிவருகிறது. தவறாமல் பாருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் **share** செய்து கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்.


ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

சந்தா விபரம்

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-



காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627

Telugu & Hindi : +91 99445 36343, Malayalam: +91 94889 32937, kannada: +91 90031 17205

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி -18

Address: Ministry of Jesus Prayer Centre, 10th Cross Street West Extension, Thillainagar, Trichy- 620018

இந்த மாதம் குறிப்பாக எங்கள் தகப்பனுடைய பிறந்த நாள் வருகிறது. அவர்களுக்காக விசேஷமாய் ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு நல்ல சுகத்தையும் நீடிய ஆயுளையும் தந்து இன்னும் வல்லமையாக பயன்படுத்தும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள்.

எங்கள் அம்மாவின் நல்ல சவுக்கியத்திற்காகவும், எங்கள் அனைவருடைய நல்ல சுகம், பெலனுக்காகவும், ஊழியத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.வெளி.1:5

**Happy Resurrection Day!**

கிறிஸ்துவின் பணியில்
Dr. **ஜேன் ஜாஷ்வா**

## இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்

**மத்தேயு 26:28, அப்போஸ்தலர் 5:31**
**அப்போஸ்தலர் 4:33, ரோமர் 1:5**




# அற்புதத்தின் மாலை

இயேசு இன்றும் ஜீவிக்கிறார்
இன்றும் அற்புதங்கள் செய்கிறார் என்பதை நிரூபிக்கும் உண்மை சம்பவங்கள்

ஞாயிறுதோறும் மாலை 7.00 மணிக்கு
Ministry of Jesus youtube சேனலில் வெளிவருகிறது.
தவறாமல் பார்த்து தேவாதி தேவனை மகிமைப்படுத்துங்கள்!

# கிறிஸ்து இயேசுவின் சிலுவையை பற்றிய உபதேசமும், அவரது வெற்றியும்!



தேவ செய்தி
**Dr. ஆனந்த ஸ்திரா**

கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளே!

ஜெபத்தில் எங்களை தாங்குகின்ற அன்பு ஜெப வீரர்களே, ஊழியம் வளர பலவிதங்களில் தாங்கி உதவி செய்யும் இறை தொண்டர்களே, உங்கள் அனைவருக்கும் அன்புள்ள இயேசுவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துதல் கூறி ஆவியானவர் எனக்குத் தந்த சிறப்பு செய்தியை இங்கு உங்களுக்கு தருகிறேன்.

இன்றைய காலகட்டத்தில் உலகில் வாழும் மக்களில் பாதி பேருக்கு மேல் இயேசுவின் சிலுவை மரணத்தை குறித்தும், அவருடைய உயிர்த்தெழுதலை குறித்தும் நன்கு அறிந்தவர்களாய் இருக்கிறார்கள். திருச்சபைகளில் குறிக்கப்பட்ட இந்த லெந்து நாட்களில் (40 நாட்கள்) தேவ மக்கள் இயேசுவின் பாடுகளை குறித்து அதிகமாய் நினைப்பதுண்டு. அப்போஸ்தலன் பவுலும், ஆதிக்காலத்து இயேசுவின் அப்போஸ்தலர் களும் தினமும் பரிசுத்த திருவிருந்து, இராப்போஜனத்தை கடைபிடித்ததை நாம் பார்க்கிறோம்.

குறிப்பிட்ட ஒரு நாட்டிற்கு நான் சென்றிருந்தப்பொழுது அங்குள்ள தேவ பிள்ளைகள் தினந்தோறும் இயேசுவின் சிலுவையைபற்றி தியானித்து இராப்போஜனத்தை பயபக்தியுடன் கொண்டாடுகிறார்கள். அவர்கள் வீடுகளில் இதற்கென்று விசேஷமாக ஒதுக்கப்பட்ட திராட்ச ரசமும், அப்பமும் இருக்கும். அந்த திராட்ச ரசத்தை வேறு எதற்கும் பயன்படுத்த மாட்டார்கள். ஒவ்வொரு நாளும் காலை எழுந்தவுடன் கணவன், மனைவி மற்றும் பிள்ளைகள் அனைவரும் இயேசுவின் பாடுகளை தியானித்து, அவருடைய இரத்தத்தை நினைவுப்படுத்தும் திராட்சரசத்தையும், அவர் சரீரத்தை நமக்கு நினைவூட்டும் அப்பத்தையும் சாப்பிட்டு, இயேசுவின் வழியாக தேவனை துதித்து ஜெபத்தை முடிக்கிறார்கள். (லூக்கா 22:19,20; 1 கொரி. 11:24)

ஆம்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகில் இருந்தப்பொழுது தாம் அடையப்போகும் கொடிய மரணத்திற்கு முன் தமது சீடர்களை பார்த்து இந்த விசேஷித்த இராப்போஜனத்தை ஆயத்தப்படுத்தும்படி கூறினார். அதின்படியே இயேசு கிறிஸ்து தாமே அந்த பஸ்காவை தலைமை தாங்கி, அப்பத்தையும், திராட்சரசத்தையும் சீடர்களுக்கு பங்கிட்டு கொடுக்கிறார். அப்படி கொடுக்கும் பொழுது தம்மை மறவாமல் நினைவு கூறும்படி சொன்னார்.

MALAYALAM WHATSAPP NO.
**+91 94889 32937**

திராட்சரசம் நமக்காக சிலுவையில் இயேசு சிந்தின ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும், அப்பம் நமக்காக நம் பாவங்களை சுமந்து, தேவனின் கிருபாதார பலியாக நொறுக்கப்பட்ட அவருடைய சரீரத்தையும் விளக்குவதாகும். எனவே தான் இன்றைக்கு அநேகர் ரோமன் கத்தோலிக்க அருள்சகோதரிகள் மற்றும் பல கிறிஸ்தவர்களும் தங்கள் செயினில் சிலுவை அடையாளத்தை அணிந்திருப்பார்கள். அக்காலத்திலே தேவனுடைய பிள்ளைகள் அடிக்கடி அதைப் பார்த்து இயேசுவின் ஒப்பற்ற அன்பை நினைத்து தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்வார்கள். நமது ஆலயங்களிலும் அதை நினைவு கூறும்படியாக மிகப்பெரிய சிலுவை வைக்கப்பட்டுள்ளதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இந்த கொடிய சிலுவை மரணம் அலெக்ஸாண்டர் என்னும் பேரரசனால் உருவாக்கப்பட்டது. கைதிகளையும், எதிராளிகளையும், தவறு செய்தவர்களையும் பல மணி நேரம் சித்ரவதை செய்து அவர்களை துடிக்க துடிக்க கொலை செய்வதற்காக நியமிக்கப்பட்ட தண்டனையின் அடையாளம் தான் சிலுவை மரணம். ரோமர்கள் லட்சக்கணக்கான கிறிஸ்தவர்களை கொடுமையாக சிலுவையில் அறைந்தார்கள். ரோமர்களின் ஆட்சிக்குப் பின் வழி வந்த சில பேரரசுகள் மற்றும் பல நாடுகளின் தலைவர்களும் இப்படித்தான் கிறிஸ்தவர்களை கொடுமைப்படுத்தினார்கள். இலட்சக்கணக்கான தேவ பிள்ளைகள் சிலுவையில் அறையப்பட்டாலும் (சில அப்போஸ்தலர்கள் உள்பட) இயேசுவின் சிலுவை மரணம் மாத்திரம் மிக மிக முக்கியமாக கருதப்படுகிறது. பக்தியுடன், நன்றியுடன் கொண்டாடப்படுகிறது. **“சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது”** (1 கொரி. 1:18) ஆம்! இன்று மேல்நாடுகள் முதற்கொண்டு, கீழை நாடுகள் வரைக்கும் பலர் வேண்டும் என்றே இயேசுவின் சிலுவை மரணத்தை பரிகசித்து, ஏளனமாய் கேலி கிண்டல் செய்கிறார்கள். ஆனால் நமக்கோ இயேசுவின் சிலுவை மரணம் பல பாடங்களை கற்றுக் கொடுக்கிறது.

## பாவம் செய்வதினால் நித்திய அழிவு

**பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும் என எசேக்கியேல் 18:4**-ல் பார்க்கிறோம். அதாவது மனிதன் பாவம் செய்யும்பொழுது நரகம் வரை அவனுக்கு நித்திய அழிவு என்று கூறுகிறார். ஆனால் ஆதி முதலே அன்புள்ள தேவன் ஆதாம் முதற்கொண்டு எல்லா மனிதனுக்கும், சுயவிருப்பத்தை கொடுத்தபடியால் அவன் எளிதாக தேவனுடைய சத்துருவாகிய சாத்தானின் கரங்களில் விழுந்து பாவியாக வாழ்கிறான். பாவத்தை எதிர்க்கும் சக்தி அவனுக்கு இல்லாமல் போகிறது. இதனால் நித்தியமான தேவ கோபாக்கினைக்கு உட்படுகிறான்.

மனுக்குலத்தை திருத்த தேவன் பல தீர்க்கதரிசிகளை, ஞான திருஷ்டிகாரர்களை, கண்டித்து உணர்த்தும் போதகர்களையும் அவர்கள் மத்தியில் நியமித்து அவர்களை எச்சரித்தாலும் கூட பாவம் பெருகிக்கொண்டே வந்தது. மேலும் ஒவ்வொரு பாவத்திற்கும் மரண தண்டனை என்று நியமிக்கப் படாமல் அதற்கு தப்பும்படி மிருகங்களின் இரத்தமும் சிந்தப்பட வேண்டியதாயிற்று. இப்படி எல்லாம் இருந்தும் மனிதனால் பாவம் செய்ய முடியாமல் இருக்க முடியவில்லை. **முடிவில் இரக்கத்திலும், தமது கிருபையிலும் ஐசுவரியமுள்ள தேவன் (எபேசியர் 1:7; 2:4) தமது சொந்த குமாரனை மனுஷனுடைய பாவங்களை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக சிலுவை மரணத்திற்கு ஒப்புவித்தார். எனவே இயேசு சிலுவையில் மரிக்கும்பொழுது பாவமற்ற அவர் நமக்காக பாவிகளில் ஒருவராக எண்ணப்பட்டார். (லூக்கா 22:37; 2 கொரி. 5:21)** பாவிகளாகிய நம் எல்லோருடைய பாவத்தையும் அவர் சுமந்து அவற்றை பாதாளத்தில் தள்ளிவிட்டார்.

அவரது சிலுவை மரணத்தின் மூலம் நாம் நீதிமான்களாக மாறுகிறோம். ஒவ்வொரு முறையும் அவரது சிலுவை மரணத்தை நினைத்து கண்ணீர் சிந்தி நாம் செய்த குற்றத்திற்காக மன்னிப்பு கேட்கும்பொழுது மகா நீதியுள்ள பரம பிதா நம்மை மன்னித்து நம் மேல் கிருபையாக இருக்கிறார்.

## சிலுவையின் பாடுகள் நமது சுபாவங்களை மாற்றுகிறது!

இயேசுவின் பாடுகளை குறித்து நாம் நினைக்கும் பொழுது இயல்பாகவே நம்முடைய மாம்ச கெட்ட சுபாவங்கள் நம்மைவிட்டு அகலுகிறது. (கலாத்தியர் 2:20) நம்மில் அன்பு கூர்ந்து நமக்காக ஒரு தகப்பனை போல தம் ஜீவனையே கொடுத்த இயேசுகிறிஸ்துவை நம் பாவ எண்ணங்களால் விசனப்படுத்தவோ, துக்கப்படுத்தவோ கூடாது என்னும் எண்ணம் நமக்குள் வருகிறது. அப்படி அந்த எண்ணம் அதிகமாகும் பொழுது நம்முடைய பழைய சுபாவம் மாறி கிறிஸ்து இயேசுவின் புதிய சுபாவம் நமக்குள் உண்டாகிறது. (2 கொரி. 5: 17)

சவுலுடைய வாழ்க்கையை பாருங்கள். அவன் அதிகம் படித்த ஒரு மனிதன். யூதருடைய மத போதகர்களில் மிகச்சிறந்தவனாகிய கமாலியேலின் பாதத்தில் அமர்ந்து நியாயப்பிரமாணத்தை கற்று தேர்ந்தவன். நியாயப்பிரமாணத்தில் உள்ளதை எல்லாம் என் வாழ்வில் நிறைவேற்றிவிட்டேன் என்று மார்தட்டி சொன்னவன். இயேசுகிறிஸ்துவின் விசுவாசிகளையும், தாய்மார்களையும், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளையும் கொடுமையாக சித்ரவதை செய்து சிறையில் அடைத்து கொலை செய்ய சம்மதித்தவன். தன்னைத்தானே நீதிமான் என்று சொன்னவன், மோசே கொடுத்த கட்டளையில் ஆறாவது கற்பனையான கொலை செய்யாதிருப்பாயாக என்னும் கட்டளையை மீறினான். பயங்கர கொலை வெறியன், மத வெறியன், நியாயப் பிரமாணத்திற்காக வைராக்கியம் கொண்டவன். எளிமையான, மீன் பிடிக்கும் தொழிலை செய்த கல்வி அறிவு இல்லாத சீடர்கள் மற்றும் கிறிஸ்துவின் விசுவாசிகள் இவனை எப்படி திருத்த முடியும், ஜெபம் மட்டும் செய்தார்கள். நடந்தது என்ன? இயேசு கிறிஸ்து முள் முடியுடன் அவனுக்கு காட்சி அளிக்கிறார். அவனுடைய கொலை பாதக வெறிச்செயல் ஒரு ஷனப்பொழுதில் இயேசுவின் சிலுவை அன்பினால் நீங்கியது. (அப்போஸ்தலர் 9:1–20) எத்தனை ஆச்சரியம் பாருங்கள்! அப்பொழுது வாழ்ந்த விசுவாசிகள் நல்லவர்கள் அவனை திருத்த முடியாவிட்டாலும், திருந்தாத கொலை பாதகன் இயேசுகிறிஸ்துவின் சிலுவை காட்சியால் வல்லமை உள்ளவனாக, தாழ்மை உள்ளவனாக, இயேசுவிற்காக எந்த துன்பத்தையும் தாங்கக் கூடியவனாக, தான் மறுதலித்த இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எங்கும் அறிவிக்கிறவனாக மாறிவிட்டான்.

ஆம் எனக்கு அன்பானவர்களே! **இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை பற்றியும், சிலுவையின் மரணத்தை பற்றியும், உயிர்த்தெழுதலை குறித்தும் சொல்லுங்கள். தேவையற்ற மற்ற எல்லா காரியங்களையும் பேசுவதை தவிர்த்து இயேசுவை பற்றி சொல்லுங்கள். அப்பொழுது தொலைந்துபோன ஆடுகள் கர்த்தரிடமாய் திருப்பப்படும்.**

## இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் அன்பால் நாம் உலகத்தை வெறுக்கிறோம்.
### (கலாத்தியர் 6:14)

நாம் வாழும் இந்த உலகத்தில் தேவனுக்கு பிரியமில்லாத பலவிதமான காரியங்கள், கேளிக்கைகள், ஆபாசங்கள் etc., etc., கொஞ்சம் கூட தேவ பயம் இல்லாமல் நடைபெற்று கொண்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம். வருடங்கள் செல்ல செல்ல இவைகள் அதிகரிக்கிறதே தவிர குறைவது இல்லை.

கர்த்தர் சொன்னபடி இந்த உலகம் நோவா மற்றும் லோத்தின் காலத்தை போல மாறிக்கொண்டிருக்கிறது. (லூக்கா 17:26–30)

**உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.**

**ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகள் அல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்.**

**உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்** – 1 யோவான் 2: 15-17 என்று இயேசுவுக்கு அன்பான சீஷனாகிய யோவான் நம்மை எச்சரிக்கிறான். ஆனால் இன்றைக்கு நாம் வாழும் உலகத்தை பாருங்கள். மனிதர்கள் உலகக் காரியங்களில் ஈடுபடவே நேரம் சரியாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் தேவனை தேட அவர்களுக்கு நேரமில்லை. உலகத்திலுள்ள பலவிதமான தேவனுக்கு விரோதமான வழிபாடுகள், லஞ்சங்கள், கொலைகள், அசுத்தங்கள், காழ்ப்புணர்ச்சிகள், வன்கண், பொறாமைகள், பெருமை, பதவி ஆசைகள் **etc., etc.,** பெருகிக்கொண்டே போவதை நாம் காண்கிறோம். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவற்றில் ஈடுபடுவதில்லை. சிறு வயதிலிருந்து ஊர்சுற்றுவது எனக்கு பிடிக்காது. பலருடன் சேர்ந்து பரிகசித்து, சிரித்து, வேடிக்கை காட்டி நேரத்தை வீணாக்குவதும் எனக்கு பிடிக்காது. உலகத்தின் பகட்டும் எனக்கு பிடிக்காது. எனவே எந்த நாட்டிற்கு சென்றாலும் உலகப்பிரகாரமான காரியங்களில் ஈடுபட மாட்டேன், அதில் எனக்கு ஆசையும் கிடையாது. வேண்டும் என்றால் மலைகள், இயற்கைகள், சிறு சிறு குருவிகள், கடல் அலைகள், சிறு குழந்தைகள், நொறுங்குண்ட வயதானவர்கள்தான் எனக்குப் பிடிக்கும். ஊழியத்திற்கு வந்த பிறகு கர்த்தருடைய பணியிலும், அதிக நேரம் தனி ஜெபங்களிலும் நேரம் செலவழிக்கிறேன். இயேசுவும், பக்தன் மோசேயும் இப்படித்தான் வாழ்ந்தார்கள். அவர்கள் உலகப்பிரகாரமான வேண்டாத எந்த காரியத்திற்கும் போகவில்லை. அதற்குப்பதிலாக அவர்கள் உள்ளம் எல்லாம் நொறுங்குண்ட, நருங்குண்ட ஆத்துமாக்களின் மீது தான் சென்றது.

இயேசு ஏழையின் கோலமாய் வந்தார். இறுதியில் அவருடைய சிலுவை மரணத்தை தடுத்து நிறுத்த முடியாத நிலையில், அங்கேயும் ஒரு ஏழையின் கோலமாய் உதவியற்றவராக காட்சியளித்தார். தேவனே அவரை பிரியும் சூழ்நிலை வந்தது. (ஏசாயா 52:14;53:3) மிகுந்த அழகுள்ள தேவ புத்திரனாகிய இயேசு தம்முடைய எல்லா மகிமையையும், வல்லமையையும் இழந்தவராக சிலுவையில் தொங்கினார். எதற்காக? நமக்காக, உதவியற்ற நம்மை தூக்கி எடுப்பதற்காக, நிலை நிறுத்துவதற்காக, நாம் தேவ கோபாக்கினையிலிருந்து விடுதலை பெற்று நித்திய ஜீவனை பெறத்தக்கதாக இயேசு அந்த சிலுவையின் மரணத்தை அடைந்தார். இதன் மூலம் தேவன் நம்மிடத்தில் வைத்த அன்பு வெளிப்பட்டது. (1 யோவான் 4:8–10). அன்பு பிள்ளைகளே! நாமும் ஏற்ற தாழ்வின்றி நம்மை சுற்றி இருக்கிற, அற்பமாய் எண்ணப்பட்டவர்களையும், தள்ளப்பட்டவர்களையும், ஆதரவற்றவர்களையும், அநீதியாக தீங்கு இழைக்கப்பட்டவர்களையும், நம்பிக்கையற்ற நிலையில் இருக்கிற மக்களையும் நினைத்து பார்க்க வேண்டும். இன்று உலகில் 80 நாடுகளில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மக்கள் கொடூர தண்டனையை அனுபவிக்கிறார்கள். இவர்களை எல்லாம் நாம் நினைத்து பார்க்கின்றோமா? சற்று யோசித்து பாருங்கள்! தேவபிள்ளைகள் கொடூரமாய் தண்டிக்கப்படும்பொழுது அவர்களுக்கு பெலன் இருந்தாலும் இயேசுவை போல பதிலுக்கு பதில் செய்யாமல் தங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபிக்கிறார்கள்.

அருமையான திருமதி ஸ்டேன்ஸ் மிஷனரி தனது கணவரையும், இரண்டு பிள்ளைகளையும் வாகனத்தோடு எரித்தவர்களை மன்னித்தார்கள். இது ஒரு வேளை உலகத்திற்கு பைத்தியமாய் தோன்றலாம். ஆனால் மன்னிக்கும்பொழுது ஒன்று தீமை செய்தவர்கள் மனந்திரும்ப வாய்ப்பு உள்ளது. மற்றொன்று கிறிஸ்து இயேசுவை சிலுவையில் அறைந்த யூதர்களை போல கொடுமையான தண்டனையை தேவனிடமிருந்து பெறுகிறார்கள். (ரோமர் 12:20)

ஹிட்லர் மகா பெரிய ஆரிய வம்சத்தை சேர்ந்தவன். ஆரியர்கள் அல்லாத பல நாடுகளை பிடிக்கிற ஒரு கொலை வெறியனாய் மாறினான். சிறு வயதில் தனது தாய்க்கு மூன்றாவது கணவனாக அமைந்த யூதன் தன் தாயை கொடுமையாய் நடத்தியதினிமித்தம், தாய் பட்ட பாடுகளை கண்டு யூதர்களை அதிகமாக வெறுத்தான். யூதர்களும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் இயேசுவை கொஞ்சம்கூட மதிக்காமல் அவரை எவ்வளவு இழிவுபடுத்த முடியுமோ அவ்வளவு இழிவுபடுத்தி பேசினார்கள். மக்களுக்கு அதிக வட்டியில் கடன் கொடுத்தார்கள். அவர்களிடம் ஏராளமான பணமும், வைர கற்கள், பொன் தகடுகள் இருந்தன. பாமர ஜெர்மானியரோ பசியினாலும், கடன் தொல்லையினாலும், வியாதிகளுக்கு கூட மருத்துவம் பார்க்க வசதியின்றி மிகுந்த கஷ்டத்தை அனுபவித்தனர். இதனிமித்தம் அந்த ஹிட்லர் என்னும் கொலை வெறி பிடித்தவன் யூதர்களை எல்லாம் அழிக்க திட்டமிட்டான். முடிவில் ஹிட்லர் 60 லட்சம் யூதர்களை Gas Chamber மூலமாய் நைட்ரிக் ஆக்ஸைடு என்னும் விஷ வாயுவின் மூலம் கொன்று போட்டான். இந்த கொலை பாதகத்தை நடத்த ஒரு மிலிட்டரி கேப்டனை வைத்தான். இவனுக்கு ஒரு மகன், மகள். ஊருக்கு வெளியே தொலை தூரத்தில் இந்த Gas Chamber இருந்தது. இவருடைய வீட்டில் நன்கு படித்து தேர்ந்த ஒரு யூத மருத்துவர் ஒருவர் சமையல் வேலைக்கு அமர்த்தப்பட்டார். ஒரு சமயம் சாப்பிடும் பொழுது தட்டை கீழே போட்டதினிமித்தம் அவனது கழுத்தை நெறித்து அந்த யூதனை இந்த கேப்டன் கொலை செய்தான். இதைக்கண்ட கேப்டனின் மனைவி தன் கணவரை விட்டு பிரிய நினைத்தாள். கணவரை கடிந்து கொண்டாள். எனினும் அவனுடைய கொடூர புத்தி மாறவில்லை. இப்படி இருக்க அந்த கேப்டனுடைய மகன் யூதர்களை காவலில் வைக்கின்ற இடத்தை சுற்றியுள்ள மின்சாரம் பாய்கிற முள்வேலிக்கு அருகில் சென்று அடிக்கடி பந்து விளையாடிக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒரு யூதனுடைய மகனுக்கும், இவனுக்கும் நட்பு உண்டானது. ஒரு சமயத்தில் யூதர்களை கொலை செய்ய அதிகாரம் பெற்ற தலைவனாகிய இவன் அப்பா, யூதர்களை எல்லாம் குளிப்பதற்கு போகச் சொல்லுங்கள். குளிப்பதற்கு நல்ல தண்ணீர் வரும். அந்த சேம்பருக்குள் அனைவரும் செல்லுங்கள் என்று கட்டளையிட்டான். அந்த யூத சிறுவன், அந்த கொடுங்கோலன் ஆன கேப்டனுடைய மகனை என்னோடு குளிக்க வா என்று அழைத்தான். எனவே இருவரும் அந்த சேம்பருக்குள் குளிக்க சென்றார்கள். இது சாதாரண குளியலறை அல்ல. குளிப்பது போல முதலாவது குழாய்களில் தண்ணீர் வரும். பிறகு கொடிய நைட்ரிக் ஆக்ஸைடு என்னும் விஷ வாயு சேம்பருக்குள் இருந்து புறப்படும். நூற்றுக்கணக்கான தாய்மார்கள், சிறு பிள்ளைகள் சில நிமிடங்களில் அந்த விஷ வாயுவை சுவாசித்து இறந்துவிடுவார்கள். கேப்டனின் மகனும், அந்த யூத சிறுவனும் உள்ளே சென்ற பிறகு சேம்பர் கதவுகள் அடைக்கப்பட்டன. கதவை அடைக்கும் பொழுது இந்த கேப்டன் நைட்ரிக் ஆக்ஸைடு வாயுவை திறந்துவிட சொன்னான். மனைவியும், மகளும் ஏற்கனவே தகப்பனுடைய குணத்தை அறிந்து ஊருக்கு போக ஆயத்தமானார்கள். மகனை காண தாய் தேட ஆரம்பித்தாள். முடிவில் அந்த கேப்டனின் மகனும் யூத சிறுவனுடன் இந்த சேம்பருக்குள் சென்றுவிட்டான் என்ற செய்தியை கேட்டு தாயும், தகப்பனும் திடுக்கிட்டனர். இதற்கு முழு பொறுப்பு தனது கொடூரமான கணவனே என்று கூறி மிகவும் கதறினாள். உடனே கேப்டன் வேலி அருகே மிக வேகமாக ஓடி அந்த விஷ வாயு குழாயின் வால்வை உடனே அடைக்க வேண்டும் என்று தீவிரமாய் முயற்சித்தான்.

ஆனால் அதற்குள்ளாக எல்லாம் முடிந்துவிட்டது. யூதருடைய இளம் பிள்ளைகளை இரக்கமின்றி கொன்ற அந்த கேப்டன், தன்னையும் அறியாமல் தன் சொந்த மகனையும் கொன்றுவிட்டான்.

ஆம் அன்பு தேவ ஜனமே! இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் அன்பை சுமந்து செல்கிற நம்மையும் உலகம் வெறுக்கலாம். ஆனால் நாம் அவர்களை மன்னிப்போம், அவர்களுக்காக ஜெபிப்போம். அவர்கள் அந்த மன்னிப்பை உதாசீனபடுத்தினார்கள் என்றால் கர்த்தருடைய கோபாக்கினை அவர்கள்மேல் வரும். இதற்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டு யூத சரித்திரம்.

## பிசாசினை மேற்கொண்ட சிலுவை !

இயேசு சிலுவையில் மரிக்கக் கூடாது என்று பிசாசு நினைத்தான். ஆனால் அதற்கு மாறாக இயேசு சிலுவையில் தாம் அடைந்த மரணத்தினால் மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசின் தலையை நசுக்கி அவனை மேற்கொண்டார். (எபிரெயர்2:14) எத்தனை பெரிய ஆறுதல். நம் அருள்நாதர் இயேசுகிறிஸ்து குண்டுகளை, பட்டயத்தை எடுக்கவில்லை. பயங்கரமான தூதர்களை வரவழைக்கவில்லை. அதற்கு மாறாக **தாம் அடைந்த சிலுவையின் மரணத்தினால் அந்த கொடிய வலுசர்ப்பத்தின் தலையை நசுக்கினார். இதை விசுவாசிக்கும்பொழுது சத்துருவின் சகல சேனைகளிடமிருந்தும், இயேசுவின் இரத்தத்தால், அவரது நாமத்தால் விடுதலை கிடைக்கும். (ரோமர்16:20;1யோவான்3:8,5) கிறிஸ்து இயேசு சிலுவையில் மரித்தபடியால் நம் சாபங்கள் நம்மைவிட்டு நீங்கின. (கலாத்தியர்3:13) அது முன்னோர்களின் சாபமாக இருந்தாலும் சரி அல்லது நமது தவறுகளின் நிமித்தம் ஏற்பட்ட சாபங்களாக இருந்தாலும் சரி கிறிஸ்து இயேசுவிடம் வரும்பொழுது நமக்கு வெற்றி கிடைக்கிறது.**

ஒரு குறிப்பிட்ட பட்டணத்திற்கு நான் ஊழியத்திற்கு சென்றேன். அக்கூட்டத்திற்கு ஒரு பெரியவரை கொண்டு வந்தார்கள். அவரால் பேச முடியாது. எப்பொழுதும் கழுத்தை தன் கையாலே நெறித்துகொண்டே இருப்பார். பெரிய பணக்காரனாக இருந்தாலும் படுத்த படுக்கைதான். எலும்பும் தோலுமாக காணப்பட்டார். பல சாபங்களும், பிசாசின் சேனைகளும் அவரை தாக்கின. அவர் தன்னையும் அறியாமல் நான் கொடுத்த தேவ செய்தியை கேட்டு தனது பாவங்களையும், தனது முற்பிதாக்கள் செய்த பாவங்களையும் அறிக்கையிட்டு கண்ணீர் வடித்தார். அவர் சைகை மூலம் "ஐயா, நான் சுகமடைய விரும்பவில்லை, என் சாபங்கள் என்னை விட்டு விலக வேண்டும்" என்று கூறினார். கர்த்தருடைய மனதுருக்கம் செயலாற்றியது. கிறிஸ்து இயேசுவின் சிலுவை அன்பு வெளிப்பட்டது. சாபங்கள் நீங்கின! அவர் உடன் தானே எழுந்து நடந்தார், பூரண சுகமானார். எலும்பும் தோலாக இருந்த அவர் மீண்டும் நார்மலாக அந்த ஊர் மக்களுக்கு நல்லதை செய்ய ஆரம்பித்தார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!

## சிலுவையில் இயேசு பட்ட காயங்களால் நாம் சுகமடைகிறோம்

### ஏசாயா 53:5 மத்தேயு 8: 17



இன்று ஒரு வேளை மருத்துவர்களால் சுகமாக்க முடியாத கொடுமையான வியாதிகள் உங்களை தாக்கிக்கொண்டு இருக்கலாம். மனம் கலங்காதீர்கள்! கர்த்தர் இயேசுவின் சிலுவை அன்பிற்கு வல்லமை உண்டு. கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் Hadrian என்னும் ரோமப் பேரரசன் வீனஸ் கடவுளுக்கு ஒரு பெரிய கோவில் கட்டி இயேசுவின் சிலுவையை தேடி யாரும் வரக்கூடாது என்று மறைத்துவிட்டான்.

ஆனால் கிறிஸ்து இயேசு மரணத்திற்கு பின் 315 ஆண்டுகளுக்கு பிறகு கான்ஸ்டன்டைன் எம்பரரின் (Emperor) **தாய் ஹெலினா** தேவ பக்தி நிறைந்தவளாக இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடத்தை துல்லியமாக கண்டுபிடிக்க வேண்டும் என்று எண்ணினாள். எனவே, Bishop Macarius உதவியுடன் எருசலேம் வந்து சேர்ந்தாள். அங்கே கர்த்தருடைய வழிகாட்டுதலின்படி இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடத்தை கண்டு பிடித்தாள். நிலத்தை வெட்டி பார்த்தபொழுது அதற்குள் மூன்று சிலுவைகளை கண்டாள். எந்த சிலுவையில் இயேசு அறையப்பட்டார் என்று தெரியாத பட்சத்தில், பக்கத்து ஊரில் மரித்துக் கொண்டிருந்த ஒரு தாயை கொண்டு வந்து மூன்று சிலுவையையும் தொட வைத்தாள். இயேசு சுமந்த சிலுவையை தொட்டவுடன் அந்த தாய் புத்துயிர் பெற்றாள். அவளது வியாதிகள் சுகமானது. பிற்பாடு **ஹெலினா** அங்கே கர்த்தருக்கு மிகப்பெரிய தேவாலயத்தை கட்டினார் என்பது சரித்திரம்.

ஆம் எனக்கு பிரியமானவர்களே! யோசித்து பாருங்கள், 315 ஆண்டுகள் கடந்தும் இயேசு சிலுவையில் அறையப்பட்ட அந்த மரக்கட்டைக்கு அவ்வளவு வல்லமை என்றால் நம் ராஜாதி ராஜாவாகிய இயேசுவுக்கு எத்தனை பெரிய வல்லமை இருக்கும். எனவே மனங்கலங்காதீர்கள்! இன்றும் அவர் நமக்காக பட்ட சிலுவையின் தழும்புகளால் எல்லா கொடிய வியாதிகளையும் நம்மைவிட்டு அகற்றுகிறார், பாடுகளையும், துன்பங்களையும் விலக்குகிறார். (ஏசாயா 53:5; மத்தேயு 8:17)

## மரண உபாதையின் கட்டிலிருந்து வெற்றி! வெற்றி! வெற்றி!

ஒருவராலும் மீள முடியாத மரணத்தை இயேசு தமது உயிர்த்தெழுதலினால் ஜெயித்தார்! (சங்கீதம் 22:29; 49:7,8) நம்மால் ஜெயிக்க முடியாத மரணத்தை இயேசு அடைந்து மரணத்தின் உபாதைகளின் வேதனையை தேவனுடைய உதவியுடன் வேரறுத்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். **(அப். 3:24 ; ஓசியா 13:14; ஏசாயா 25:8,9)** அவர் மரித்தோரிலிருந்து எழும்பி தம் சீடர்களுக்கு காட்சியளித்து 120 பேருக்கு முன்பாக பரமேறி தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். மீண்டும் ராஜாதி ராஜாவாக வரப்போகிறார். இது தான் நமக்கு சந்தோஷம். எனவே மரணத்தை குறித்து நாம் பயப்பட வேண்டாம். இயேசு நம்மோடு கூட இருந்து மரணப் பள்ளத்தாக்கிலிருந்து நம்மை மீட்டு நம் ஆத்துமாவை தாம் வாசம் செய்யும் பரலோகத்திற்கு கொண்டு செல்வார்.

கடந்த டிசம்பர் மாதம் நானும் கூட சுய நினைவு இழந்து தலைகீழாக விழுந்தேன். என் முதுகெலும்பு பாதிக்கப்பட்டது. 28ம் தேதி என்னுடைய மூளைக்கு செல்லும் அதி முக்கியமான இரத்த குழாய் அடைப்பட்டு நரம்புகள் செயல் இழந்தது. இதனால் 28-ம் தேதி மதியத்திலிருந்து அடுத்த நாள் காலை 8 மணி வரை நான் எங்கே இருக்கின்றேன், என்ன செய்கின்றேன் என்றே எனக்கு தெரியாமல் போனது. பலவித சிகிச்சைகள் எனக்கு அளிக்கப்பட்டு முடிவில் அசைவற்று ஒரு சடலமாய் இருந்திருக்கிறேன். எனது நண்பர் மருத்துவர் எவ்வளவோ முயற்சித்தும் ஒன்றும் முடியவில்லை. எனது மனைவி, மகள், மருமகன், பேரன் ஜோனத்தன் மோசஸ், உடன் பணியாள் பிரேம் ஆகியோர் உடனிருந்து, அழுது ஜெபித்திருக்கிறார்கள். எதுவும் எனக்கு தெரியாது. நான் மரண இருளை தாண்டிச் சென்றேன். திடிரென சங்கீதம் 23:4-ம் வசனம் பளிச்சென்று பரலோகத்திலிருந்து வெளிச்சமாய் எனக்கு வந்தது. நான் விழித்து பார்த்தேன்.

ஆம் எனக்கு அன்பான தேவ பிள்ளைகளே! மரண பயம் நம்மை ஒருபோதும் ஆட்கொள்ளாது. கிறிஸ்து இயேசு மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்து பரலோகத்திற்கு சென்றது போல, நாமும் மரித்தவுடன் தேவ தூதர்களால் நம்முடைய ஆத்துமா எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவன் வாசம் செய்யும் பரலோகத்தை அடையும். எத்தனை சிலாக்கியம் அல்லவா? எனவே சோர்ந்து போகாதீர்கள்.

**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.** 1 கொரி.15:57,58

இந்த வசனங்களின்படி தொடர்ந்து ஜெபத்துடன், முழுபெலத்தோடு, முழு ஆத்துமாவோடு தேவனுக்காக ஊழியம் செய்வோம். உலகத்தை கிறிஸ்து இயேசுவின் அன்பால் அசைப்போம். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமை நம்முடன் செயல்படும். ஜீவனுள்ள தேவன் அற்ப ஊழியக்காரனாகிய என் மூலம் 53 பேரை மரணத்திலிருந்து உயிர்ப்பித்தது போல உங்களுக்கும் வல்லமையை தந்து ஆசீர்வதித்து ஊழியத்தில் பயன்படுத்துவார். உங்களை உலக வாழ்விலும் ஜெயமாக நடத்துவார். (சங்கீதம் 18:35,50; சங்கீதம் 20:5) தொடர்ந்து உங்கள் அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். நீங்களும் எங்களுக்காக ஜெபியுங்கள். ஊழியத்தை தாங்கும் உங்கள் ஒவ்வொருவரையும் அவர் மிகவும் ஆசீர்வதிப்பாராக!

TAMIL WHATSAPP NO.
**+91 95975 55066**

# முக்கிய அறிவிப்பு

**அன்பான பங்காளர்களே,**

- ஊழியத்தையும், S.J.Saves Trust-யும் நேசித்து ஆன் லைன் வாயிலாக நீங்கள் காணிக்கை அனுப்பி தாங்கி வருவதற்காக எங்களுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறோம்.
- நீங்கள் வங்கி அல்லது ஆன் லைன் மூலமாக காணிக்கை அனுப்பும்பொழுது உங்களுடைய விலாசம், தொலைபேசி எண் அல்லது Email ID–ஐ தெளிவாக எழுதி அனுப்புங்கள். அப்பொழுது **நீங்கள் அனுப்பிய காணிக்கையை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்பதை உங்களுக்கு தெரியப்படுத்தவும், உங்களுக்கு நன்றி சொல்லவும், உங்களுக்காக ஜெபிக்கவும், பத்திரிக்கை அனுப்பவும் உதவியாக இருக்கும்.**
- ஊழியத்தை தாங்குகிற உங்களுக்காக நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம். கர்த்தர் தாமே உங்கள் நீதியின் விளைச்சலை ஆசீர்வதித்து பலமடங்காக வர்த்திக்கச்செய்வாராக!

2கொரி.9:10, 2சாமு.5:10, நீதி.11:25, சங்.112:1–10.



# We are Hiring!!!

## ACCOUNTANT

(B.com. / M.com. Graduates)
Skills Required : Tally ERP 9

*Apply to*
ministryofjesushr@gmail.com

## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

**தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

நம்பிக்கை TELEVISION

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 முதல் 9.00 வரை

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

புதன், வியாழன், வெள்ளி.
இரவு 7.00 முதல் 7.30 வரை

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST TV கேரளம்

சனி
இரவு 7.30 முதல் 8.00 வரை

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

**ஞாயிறு தோறும்**
**காலை 9.30 மணி – 11.30 மணி**

- ✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ✓ அனல்மூட்டும் தேவ செய்தி
- ✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.



டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.

# Happy 71st Birthday

## Dr. Ananda Stira

ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர்.
சங்கீதம் 61:6
என் கை அவனோடே உறுதியாயிருக்கும்,
என் புயம் அவனைப் பலப்படுத்தும்.
சங்கீதம் 89:21



அன்புக்கு சான்றாய்,
ஆண்டவரின் பணியில் முனைந்து
இயேசுவின் மனதுருக்கத்தில் நிறைந்து
ஈகை உள்ளத்தினராய்
இகத்தினில் வலம் வந்து
உள்ளம் உடைந்த மக்களுக்கு
ஊக்கம் தந்து
என்றும் எங்கள் மனதில் நிற்கிற
Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள்
நல்ல சுக, பெலத்துடன் பல்லாண்டுகள்
வாழ வாழ்த்துகிறோம்! ஜெபிக்கிறோம்!





**அன்பரின் ஊழியக் குடும்பம்**

# MARCH 2024

# தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

1 சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. 1கொரி.1:18

2 தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? ரோமர் 8:32

3 நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். ஏசாயா 53:5

4 அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார். மத்.8:17

5 அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. 2கொரி.8:9

6 நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக. கலா.6:14

7 தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. 1யோவான் 4:9

8 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். 1பேதுரு 2:24

9 அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். ரோமர் 5:6

10 கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். கலா.2:20

11 அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. 1யோவான் 4:10

12 ... என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள். சங். 22:16

13 கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார். ஏசா.53:10

14 கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். ஏசா.53:6

15 அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். பிலி.2:8

MARCH 2024

# தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

16 நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். ஏசா.53:4

17 என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.ஏசா.53:8

18 அவர்...அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். எபி.12:2

19 அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். கலா.6:14

20 பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். 1யோவான் 3:8

21 நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். ரோமர் 5:8

22 நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம்.... உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! எபி.9:14

23 பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். எபே.2:16

24 மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். ஏசா.53:4

25 அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள். ஏசா.52:14

26 நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. ஏசா.53:5

27 என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். கலா.2:20

28 இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். லூக்.22:19

29 அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஏசாயா 53:5

30 ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து,... புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். எபி.9:15

31 ....உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். லூக்கா 24:5-6



# துதி அறிக்கை

## தற்கொலை எண்ணத்தை மாற்றி, கர்த்தர் புது வாழ்வை தந்தார்!



என் பெயர் சாமுவேல் அன்பு தாஸ். 2005-ம் வருடம் எனக்கு ஏற்பட்ட ஒரு இழப்பின் நிமித்தம் இறந்து விடலாம் என நினைத்தேன், மனதளவில் அதிகமாக கஷ்டப்பட்டேன். அப்பொழுது கோலார் தங்க வயலில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களுடைய கூட்டம் நடைபெற்றது. அந்நாளில், ஆண்டவரே நான் உயிரோடு வாழ தேவையான பெலனை தாரும் என ஜெபித்து விட்டு கூட்டத்திற்கு வந்தேன். கூட்டத்தின் ஒரு ஓரத்தில் அமர்ந்திருந்தேன். சகோதரர் ஜெப நேரத்தில் என்னை பெயர் சொல்லி அழைத்து, ஆண்டவர் உன்னை நேசிக்கிறார் என சொன்னவுடன், எனக்குள்ளிருந்த அந்த சஞ்சலம் நொடிப்பொழுதில் நீங்கி ஒருவித சமாதானத்தை பெற்றேன். ஒரு சில நாட்களில் அந்த இழப்பிலிருந்து நான் மீண்டு வர ஆண்டவர் உதவி செய்தார். குவைத்தில் வேலை கிடைத்து சென்றுவிட்டேன். அங்கு அரேபியர்கள் ஏராளமான பேருக்கு என் வாழ்வில் இயேசு செய்ததை சொன்னேன். (சங்.106:2) கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சகோதரருக்கு என்னுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறேன்.

–திரு. சாமுவேல் அன்புதாஸ், கர்நாடகா.

## பொருத்தனை ஜெபத்திற்கு கர்த்தர் பதில் தந்தார்!



எங்களுடைய மணக்காடு விற்கமுடியாமல் பல வருடங்களாக தடையாகவே இருந்தது. 2023-ம் வருடம் திருச்சியில் அன்பரின் ஊழிய பங்காளர் களுக்கான தனி ஜெபம் நடைபெற்றது. அந்த தனிஜெபத்திற்கு நான் வந்திருந்து இரண்டு காரியங்களை ஜெப விண்ணப்பத்தில் எழுதிக்கொடுத்து **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். என்னையும் பொருத்தனை செய்யும்படி சொன்னார்கள். ஒருசில நாட்களில் அவை நல்ல விலைக்கு விற்பதற்கு கர்த்தர் உதவி செய்தார். என்னுடைய பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன். இன்னொரு நிலம் விஷயத்தில் எங்கள் உறவினர் நிலத்தை எங்களுக்கு தராமல் மறுத்தப்பொழுதும், அந்த நிலத்தை வாங்கிய நபரே ஒன்றரை மாதங்களில் அந்த நிலத்தை எங்களிடமே விற்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். என் மகன் நடந்து முடிந்த தேர்வில் அனைத்து பாடத்திலும் 100 மதிப்பெண்கள் எடுக்க கர்த்தர் உதவி செய்தார்.

–திருமதி. பாக்கியலெட்சுமி, லால்குடி.

## முக்கிய குறிப்பு

மார்ச் மாதம் 2-ம் தேதி திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் உபவாச ஜெபம் நடைபெறும். இந்த நாளில் தேசத்திற்காக, மற்றவர்களுக்காக உபவாசத்துடன் ஜெபிக்கிறவர்கள் மாத்திரம் வரவேண்டும். எஸ்தர் ராஜாத்தியை போல ஊக்கமாய் ஜெபிப்போம். கர்த்தர் நிச்சயம் நம் விண்ணப்பத்திற்கு செவிகொடுத்து பெரிய காரியத்தை செய்வார். (யோவேல் 2:12-24)



## அற்புத சுகம் கிடைத்தது

என் மனைவிக்கு திடீரென உடல்நிலை சரியில்லாமல் ஆனது. சிறிது நேரத்தில் அதிக சீரியஸ் ஆன நிலைக்கு வந்து விட்டார்கள். உடனே அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு என் மனைவிக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். பாரத்துடன் ஜெபித்தார்கள். அதன்பின் என் மனைவி நல்ல சுகத்துடன் இருக்கிறார்கள். அற்புத சுகம் கொடுத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

–திரு. பால்ராஜ், கருங்கல்.

## வருமானத்திற்கான வழி திறந்தது



கடந்த கொரோனா நோய் தொற்று நேரத்தில் எங்களுடைய கம்பெனியை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்பின் தொடர்ந்து 3 வருடமாக பூட்டிய நிலையில்தான் இருந்தது. நான் பகுதி நேரமாக ஊழியம் செய்துக்கொண்டிருக்கிறேன். சமீபத்தில் அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு, கம்பெனிக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். கர்த்தர் ஒரு அற்புதம் செய்தார். மூடியிருந்த அந்த கம்பெனியை பழுதுபார்த்து நடத்துவதற்கும், அதன்மூலம் வருமானம் வருவதற்கும் கர்த்தர் உதவி செய்தார். கடந்த டிசம்பர் மாதம் எனக்கு திருமணம் நடைபெறவும் கர்த்தர் தயை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

–திரு. பிலிப் பொன்னுசாமி



## குழந்தை பாக்கியம் கிடைத்தது!

எனக்கு திருமணமாகி கடந்த 5 வருடங்களாக குழந்தை இல்லை. அதற்காக பல சிகிச்சைகளை எடுத்தேன். எந்த பயனும் இல்லை. வீட்டிற்கு வாரிசு இல்லையே என்ற ஏக்கம் அனைவருக்கும் ஏற்பட்டது. அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகளை தொடர்ந்து பார்ப்பேன். சில வருடங்களுக்கு முன்பு வேலூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் வந்திருந்தார்கள். தனி ஜெப நேரத்தில் சகோதரரை நேரில் சந்தித்து குழந்தைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அடுத்த வருடமே எனக்கு குழந்தை பிறந்தது. அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

–திருமதி. ஜாய்ஸ் மேரி, காட்பாடி. ,

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website)
Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

UPI Google Pay Paytm PhonePe

இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

### வங்கிக் கணக்குகளின் விபரம்




| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

**Cell no. 94888 45627, 80987 42638**

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# S.J. SavesTrust

**சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான், தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார், பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான். அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர்.(சங் 41:1-2)**

**அந்நாட்களில் விருந்துண்டு சந்தோஷங்கொண்டாடவும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும், எளியவர்களுக்குத் தானதர்மஞ்செய்யவும் வேண்டுமென்று திட்டம் பண்ணினான். எஸ்தர் 9:22**

கடந்த டிசம்பர் மாதம் சேலம் மாவட்டம் மின்னாம்பள்ளியில் உள்ள வைஷ்ணவி மஹாலில் நம் டியுஷன் சென்டரில் உள்ள பிள்ளைகளுடன் இணைந்து கிறிஸ்துமஸ் பண்டிகையானது சிறப்பிக்கப்பட்டது.

**S.J.Saves Trust-ல் உள்ள டியுஷன் சென்டர்களில் படிக்கிற 420 ஏழை, எளிய மாணவ, மாணவியர்களுக்கு**

**Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கான சில அன்பளிப்புகளை வழங்கினார்கள்.**

**A.N. மங்கலம் கிராமத்தில் வசிக்கிற 50 ஏழை விதவைப்பெண்களுக்கும், ஏழை தாய்மார்களுக்கும் புடவைகள் வழங்கப்பட்டது. பெண்களின் ஆரோக்கியம் மேம்பட அவர்களுக்கு புரோட்டின் பவுடரை Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் வழங்கினார்கள்.**

அனைவருக்கும் சுவையான மதிய உணவு (சாம்பார், பொரியல் வகைகளுடன் சாப்பாடு, வடை, பாயாசம், சிக்கன் கிரேவி) மற்றும் கேக் வகைகள் வழங்கப்பட்டது. அனைவரும் வயிறார சாப்பிட்டு மகிழ்ச்சியுடன் சென்றனர்.



# S J SAVES TRUST

## *27.12.2023 - Salem - Minnampalli Christmas Feast*



# S.J.S.T. மருத்துவமனை பணிகள்





கர்த்தராகிய இயேசுகிறிஸ்து லூக்கா 16:19–31ல் ஐசுவரியவான், ஏழை லாசரைப்பற்றி ஒரு அருமையான சம்பவத்தை கூறியுள்ளார். இன்றைக்கு அநேகருடைய வாழ்வில் இருக்கிற பல போராட்டங்கள் நிமித்தம் பிறரை கண்டும் காணாமல் வாழ்ந்துக் கொண்டிருக்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் அன்புள்ள கர்த்தர் நம் வாழ்வில் இக்கட்டான நேரத்தில் உதவி செய்ததையும் கூட நாம் மறந்துவிடுகிறோம். ஒருபோதும் நாம் அப்படி இருக்கக்கூடாது. சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் கஷ்டப்படுகிற மக்களுக்கு உதவி செய்ய வேண்டும். **(கலாத்தியர் 6:9 ரோமர் 2:10 2தெச.3:13)**

நாம் சந்தோஷமாக இருப்பது மாத்திரமல்ல, மற்றவர்களையும் சந்தோஷப்படுத்த வேண்டும். மற்றவர்களின் பாரங்களையும், கவலைகளையும் நாம் நினைக்க வேண்டும். இப்படி செய்வதினால் கர்த்தர் நம் மூலமாக ஆயிரக்கணக்கான மக்களை வறுமையிலிருந்தும், வியாதியிலிருந்தும், தரித்திரத்திலிருந்தும் பாதுகாப்பார்.

இதுவரை மருத்துவப்பணிகளுக்கு உதவிய உங்களுக்கு எங்களது நன்றிகளை தெரிவிக்கிறோம்.

## ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய

***Bank A/c. Name : S J SAVES TRUST***
***Account No. 019150310875369***
***Bank Name : Tamilnadu Mercantile Bank***
***Branch : Palakarai, Trichy***
***IFSC Code : TMBL 0000019***
***A/c Type : Current***

## மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய

***Bank A/c. Name : S J SAVES TRUST***
***Account No. 36477148891***
***Bank Name : State Bank of India***
***Branch : Cantonment, Trichy  Main Branch***
***IFSC Code : SBIN 0000930***
***A/c Type : Current***

# கொரூர மனிதர்களை நல்லவர்களாய் மாற்றிய சாதாரண குடும்பம்

*மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். யோவான் 12:24*



Florrie Evans

## எழுப்புதல்

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு மிகப்பெரிய கிறிஸ்தவ எழுப்புதல் வேல்ஸ் (Wales) நாடு முழுவதும் பரவிற்று. அந்த நாட்டு மக்களில் அநேகர் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாகவும், மிஷனரிகளாகவும் தங்களை ஒப்புக்கொடுத்தனர். அநேகர் மனந்திரும்பி ஆவிக்குரிய அனுபவம் பெற்று உலகின் பல நாடுகளுக்கு சென்று சுவிசேஷம் அறிவித்தனர்.

## Florrie Evans–ன் வருகை

Florrie Evans என்பவர் இந்தியாவிற்கு சுவிசேஷத்தை கொண்டு வந்தார். அவர் கடல் கடந்து வடகிழக்கு இந்தியாவில் அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்திற்கு வந்தார். அந்த கிராமத்தில் நாகா என்ற மலைவாழ் மக்கள் வாழ்ந்துக்கொண்டிருந்தனர். Garo Hills மலைப்பகுதியிலுள்ள இம்மக்கள் கிறிஸ்துவை பற்றி கேள்விப்படாதவர்கள். முதலாவதாக அவர் அங்கு வரக்கூடாது என்று சொல்லி அந்த கிராமத்து தலைவனிடமிருந்து எதிர்ப்பு வந்தது.

## முதன்முதலாக இயேசுவை ஏற்றுக்கொண்ட குடும்பம்

இந்த கிராமத்தில் இருப்பவர்கள் தங்கள் சத்துருக்களின் தலைகளை வெட்டி தங்கள் குடிசைகளில் அவர்களுடைய தலைகளை தொங்க விடுவார்கள். யாருடைய குடிசையில் அதிகமான மனிதத்தலைகள் தொங்குகிறதோ அவன் தான் அந்த கிராமத்திற்கு தலைவனாக இருப்பான். இப்படி இருக்க இந்த தேவ பிள்ளையை அந்த கிராமத்தின் தலைவன் பல முறை எச்சரித்தான். ஆனாலும் அவர் தொடர்ந்து அம்மக்கள் மத்தியிலும் ஊழியம் செய்தார். அவருடைய அயராத சுவிசேஷப் பணியால் ஒரு குடும்பம் மட்டும் இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டது. (தாய்,தகப்பன் இரண்டு பிள்ளைகள்)

முதல் முதலாக மனந்திரும்பிய அந்த குடும்பம் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் சந்தோஷத்தை தங்கள் உறவினர்களுக்கும், தங்கள் ஊர் மக்களுக்கும் பிரசித்தப்படுத்தினார்கள். இதனால் அந்த கிராமத்தில் அநேகர் கிறிஸ்து இயேசுவை பற்றி அறிய வாய்ப்பு கிடைத்தது. இதனை அறிந்த கிராமத்தலைவன் அந்த குடும்பத்தினரை பல முறை எச்சரித்தான். ஆனால் அவர்களோ எங்கள் பாவங்களை சுமந்து எங்களுக்காக சிலுவையில் மரித்த இயேசுவை நாங்கள் ஒருபோதும் மறுதலிக்க முடியாது என்று உறுதியாக கூறிவிட்டனர்.



## இயேசுவிற்காக மண்ணில் மடிந்த முத்துக்கள்

ஒரு நாள் கிராமத்தலைவன் அந்த குடும்பத்தினரை அழைத்து நூற்றுக்கணக்கான மக்களுக்கு முன் அவர்களை நிறுத்தினான். பிறகு இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட தகப்பனை பார்த்து, நீ இயேசுவை மறுதலித்துவிடு இல்லை என்றால் உங்களில் ஒவ்வொருவரையும் விஷ அம்புகளால் கொன்று விடுவேன் என்று மிரட்டினான். அவரோ என்னை ஆட்கொண்ட இயேசுவை நான் ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன் அவரால் என் பாவம் மன்னிக்கப்பட்டது. எனக்கு சமாதானம் கிடைத்தது. அந்த சமாதானத்தை உங்களுக்கும் அறிவிக்கிறேன் என்றார். இதைக்கேட்ட அந்த தலைவன் மிகுந்த கோபமடைந்து தன்னுடைய அம்புகளை அவருடைய மகன் மற்றும் மகள் மீது எய்தான். விஷ அம்புகள் பிள்ளைகள் இருவர் மீதும் பாய்ந்து துடிதுடித்து இறந்தனர்.

அந்த தலைவன் மீண்டும் கேட்டான். இப்போதாவது இயேசுவை மறுதலித்துவிடு உன் மனைவியாவது பிழைப்பாள் என்றான்.ஆனால் அவர்களோ எங்கள் உயிரே போனாலும் கர்த்தராகிய இயேசுவிற்கு பின் செல்ல துணிந்து விட்டோம். எனவே கிறிஸ்துவின் அன்பை விட்டு எதுவும் எங்களை பிரிக்காது என்று கூறிவிட்டார்கள். உடனே கணவருக்கு முன்பாக மனைவியின் உயிரும் பறிக்கப்பட்டது. கடைசியாக கணவர் மட்டும் நின்று கொண்டிருந்தார். அவரைப்பார்த்து, தலைவன் நீ வாழ விரும்புகிறாயா? அல்லது மரிக்க விரும்புகிறாயா? எனக் கேட்டான். அவரோ **"இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன், பின்னோக்கேன் நான்"** என்று சத்தமிட்டு கூறினார். உடனே அந்த தலைவன் அவரையும் கொன்று போட்டான். இந்த காட்சியை நூற்றுக்கணக்கான மக்கள் பார்த்த வண்ணமாக நின்றுக்கொண்டு இருந்தனர். நான்கு பேரையும் கொன்று போட்ட பின் அந்த தலைவன் தன் வீட்டிற்கு சென்றான். அவனுடைய கடினமான உள்ளத்தில் பல கேள்விகள் எழுந்தது. அவன் யோசிக்க ஆரம்பித்தான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இயேசுவுக்காக இவர்கள் ஏன் குடும்பமாக சாக வேண்டும். **சிலுவை என் முன்னே! உலகம் என் பின்னே** என்று ஏன் கூற வேண்டும். அந்த இயேசு மகானிடத்தில் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என்று எண்ணினான்.





## புது திருப்பம்

அந்த நான்கு பேரின் தைரியமும், விசுவாசமும் அந்த கொடூரமான தலைவனையும், கிராமத்து மக்களையும் தொட்டது. அவர்கள் எல்லோரும் அந்த குடும்பத்தினரை கொன்றதற்காக மிகவும் மனம் வருந்தி, தங்களுடைய கொடூர செயல்களை விட்டுவிட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிப்படைந்தனர்.

முடிவில் அங்கு மிகப் பெரிய எழுப்புதல் உருவாயிற்று. நாகா என்ற அந்த மலை வாழ் மக்கள் வாழும் மாநிலம்தான் தற்போது நாகலாந்து மாநிலமாகும். அம்மாநிலத்தில் **90%** கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உலகிலேயே (Largest Baptist ) திருச்சபை மக்கள் அதிகம் உள்ள இடம் நாகலாந்துதான் என்பது குறிப்பிடத்தக்கது.இந்த உண்மை சம்பவத்தை அறிந்த சாதுசுந்தர்சிங் அவர்கள் **"இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்"** பாடலை எழுதினார்.

**இயேசுவின் பின்னே**
**போகத் துணிந்தேன்**
**பின்னோக்கேன் நான்,**
**பின்னோக்கேன் நான்**
**உலகம் என் பின்னே**
**சிலுவை என் முன்னே**
**பின்னோக்கேன் நான்,**
**பின்னோக்கேன் நான்**


இந்த பாடல் தொனிக்காத இடமே இல்லை. தொடர்ந்து இது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. வெளிநாடுகளில் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட பில்லிகிரஹாம் போன்ற மகா பெரிய தேவமனிதர்கள் நடத்திய மிகப்பெரிய கூட்டங்களில் தவறாமல் இந்த பாடலை விசுவாசிகளும், பிரசங்கிமாறும் பாட ஆரம்பித்தனர். ஆம் பிரியமானவர்களே! உலகின் கடைசி காலத்தில் வாழுகின்ற நாம் கர்த்தருடைய வருகையை சீக்கிரமாய் எதிர்பார்க்கிறோம். நாமும் நம்மோடு சேர்ந்த உலகளாவிய கிறிஸ்தவர்களும் பலவிதமான உபத்திரவங்களை கடந்து செல்ல வேண்டியதாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் கிறிஸ்துவுக்கு விரோமான அலைகள் பெருகி வருகிறது. நீங்கள் உங்களை தானே உய்த்து ஆராயுங்கள்! என்ன நடந்தாலும் இந்த அருமையான குடும்பத்தை போல இயேசுவின் பின் செல்வீர்களா? கஷ்டங்கள், நஷ்டங்கள், மரணம், புறக்கணிக்கப் படுதல், கொலை மிரட்டல்கள் இவற்றை கண்டு பேதுருவை போல அவரை மறுதலிப்பீர்களா? அல்லது நீதியின் கிரீடம் எனக்காக பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மனதில் வைத்து விசுவாசத்தை காத்துக்கொள்வீர்களா?



Source Tamil Bible Library | Enlightening Paths




# உலக செய்திகள்



நாம் வாழும் பூமியை அளந்து பார்க்கும் ஆவல் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே, ஒரு மனிதனுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆம்..! அவர் தான் கிரேக்க விஞ்ஞானி எரடோஸ்தனிஸ் (Eratosthenes)

அவர் கி.மு.276-ல் லிபியாவில் உள்ள சைரீனில் பிறந்தவர். அலெக்சாண்டிரியாவில் இலக்கணமும், ஏதென்ஸில் தத்துவமும் படித்தார். கி.மு.236-ல் அலெக்சாண்டிரியாவில் உள்ள ஒரு நூலகத்திற்கு நூலகரானார். இங்குதான் எரடோஸ்தனிஸ் கணிதத்திலும், அறிவியலிலும் பல முக்கிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டார்.

பூமியின் மேல்புறம் சூரிய ஒளியால் உருவாகும் நிழலை வைத்து, பூமியின் அனைத்து பரிமாணங்களையும் கண்டறிந்த இவர், உலகில் முதன் முதலில் பூமியின் விட்டத்தையும் சுற்றளவையும் அளந்து சொன்னார். அட்சரேகை, தீர்க்க ரேகை என்கிற அளவீட்டு முறைகளையும் அறிமுகப்படுத்தினார். புவியியலின் ஒழுங்குமுறை விதிகளை வகுத்ததும் இவரே.



வான்வெளியை உற்று நோக்கியது போலவே, பூமியையும் கவனித்து, கணக்கிட்டு பல உண்மைகளை இவர் கண்டறிந்தார். சூரிய உதயம் என்பது ஆறு மாதம் வடக்கிலிருந்து தெற்காகவும், அடுத்த ஆறு மாதம் தெற்கிலிருந்து வடக்காகவும் நகர்ந்துகொண்டே இருப்பதை கவனித்தார். இதிலிருந்து தான் பூமியின் விட்டம் அறியும் ஆராய்ச்சி ஆரம்பமானது.

சூரிய கதிரின் சாய்மானம், நிழலின் சாய்மானம் இவற்றை வைத்து, பூமி 23.5 டிகிரி சாய்மானத்தில் சுழலுகிறது என்று கணித்ததோடு, புவியின் சுற்றளவையும் சரியாகக் கணித்துச் சொன்னார். அத்துடன் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் **"லீப்"** தினத்தையும் கண்டறிந்தார். முதல் முதலில் உலக வரைபடத்தை தயாரித்தவரும் இவர்தான்.

எரடோஸ்தனிஸ் எழுதிய புவியியல் புத்தகம் 3 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. புவியியல் ஆராய்ச்சிக்கு ஆதார நூல்களாக இவை விளங்கி வருகின்றன. இத்தனை சாதனைகளை செய்த எரடோஸ்தனிஸ்க்கு 80-வது வயதில் பார்வை பறிபோனது. ஒரு மனிதனுக்கு பார்வை போன பிறகு வாழ்வது கொடுமை எனக் கருதிய இவர், பல நாட்கள் உண்ணாநோன்பிருந்து கி.மு.194-ல் மறைந்தார். உலகின் நில அளவீட்டாளர், கணக்காளர், புவியியல் தந்தை என்றெல்லாம் கொண்டாடப்பட்ட எரடோஸ்தனிஸ்க்கு பெருமை சேர்க்கும் விதமாக சந்திரனில் உள்ள ஒரு பள்ளத்திற்கு இவர் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.



# Rev. Dr. A. ஜாஷ்வா அவர்களின் ஜெபத்தினால் கர்த்தர் செய்த அற்புதம்

## மூளை அருகில் இருந்த கட்டி மறைந்தது



2017-ம் ஆண்டு தலைவலியினால் அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். பிரசவ வேதனையைக் காட்டிலும் தலைவலியின் வேதனைதான் அதிகமாக இருக்கும். அந்த அளவிற்கு கஷ்டப்பட்டேன். வீட்டிற்குள் புரண்டு புரண்டு அழுவேன். இதற்காக மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்தப்பொழுது மூளையின் அருகில் கட்டி இருக்கிறது ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என சொல்லிவிட்டார்கள். மூன்று மருத்துவமனையிலும் இதே ரிப்போர்டை தான் சொன்னார்கள். அதன்பின் 2018-ம் வருடம் ஜனவரி மாதம் தாம்பரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். அந்த நாளில் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும், அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும். மல்கியா 4:2 புத்தாண்டு வாக்குத்தத்த செய்தியை **Rev.Dr.A.ஜாஷ்வா** அவர்கள் கொடுத்தார்கள். செய்தி முடிந்து தனி ஜெப நேரத்தில் பாஸ்டரிடம் என்னுடைய தலைவலிக்காகவும், மூளையில் உள்ள கட்டியைக் குறித்தும் சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். பாஸ்டர் பாரத்துடன் ஜெபித்துவிட்டு, நல்லாயிடும் விசுவாசத்துடன் செல்லுங்கள் என சொன்னார்கள். அன்றிலிருந்து எனக்கு தலைவலி இல்லை. நல்ல சுகத்துடன் இருக்கிறேன். ஒரு காய்ச்சல் வந்தால்கூட தலைவலி வருவது இல்லை. அந்த அளவிற்கு கர்த்தர் என்னை பாதுகாத்து வருகிறார். இப்பொழுது 8 ஆண்டுகளாக நான் ஆப்ரேஷன் எதுவும் செய்யவில்லை. அற்புத சுகத்தைக் கொடுத்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். 2020-ம் ஆண்டு கூட்டத்திற்கு வந்து என் மகளுடைய திருமணத்திற்காக ஜெபித்து சென்றேன். மகளுக்கு கர்த்தர் நல்ல கணவரை தந்தார். ஒரு குழந்தையும் இருக்கிறது. தேவனுக்கே மகிமை! எங்களுக்காக ஜெபித்த பாஸ்டருக்கு நன்றி.

–திருமதி. ஜாய்ஸ், ஸ்ரீபெரும்புத்தூர்.

## மகனின் திடீர் மாற்றம்




2022-ல் என் மகன் கல்லூரிக்கு போகாமல் வீட்டில் இருந்தான். இதனால் நாங்கள் அனைவரும் அதிக வேதனை அடைந்தோம். ஒரு நாள் நம்பிக்கை டி.வி.யில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சியில் **Rev.Dr.A.ஜாஷ்வா** அவர்கள் தேவ செய்தி கொடுத்தார்கள். செய்தி முடிந்து இறுதி ஜெபம் ஏறெடுத்தார்கள். நானும் பாஸ்டருடன் இணைந்து என் மகனுக்காக ஜெபித்தேன். அடுத்த நாளிலிருந்து என் மகன் கல்லூரிக்கு சென்றான். படிப்பையும் முடித்துவிட்டான். இந்த சாட்சியை சொல்வதற்காக ஈரோடு கூட்டத்திற்கு ஆவலுடன் வந்தேன்.

–திரு. பவுல் செல்வன், திருப்பூர்.

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

## திருச்சியில்

**30** மார்ச் 2024 சனிக்கிழமை

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி-18

காலை 9:30 மணி முதல் மதியம் 2:00 மணி வரை



தேவ செய்தியாளர்கள்

Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்

## சென்னையில்

**09** ஏப்ரல் 2024 செவ்வாய்கிழமை (அரசு விடுமுறை)



BKN SKIDMORE ஹால்,
ரித்தர்டன் ரோடு, வெப்பேரி, சென்னை

காலை 9:30 மணி முதல் 2:00 மணி வரை

தேவ செய்தியாளர்கள்

Dr.ஆனந்த ஸ்திரா, Mrs. மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922
(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,